(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் கோமாறி நோயால் ஆடு, மாடுகள் இறந்தது குறித்தும் நிவாரண நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் ஒருவார காலமாக ஆடு, மாடுகள் கோமாறி என்ற கொடுமையான தொத்து வியாதியால் பாதிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கில் இறந்து சேதமடைந்துள்ளன. இன்னும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்காததால் அப் பகுதியில் பதட்ட நிலை நிலவுவது குறித்து மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, திரு. துரை முத்துசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் பின்வரும் பொருள் குறித்து அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்துள்ளார்.

''தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு வார காலமாக ஆடு. மாடுகள் கோமாறி என்ற கொடுமையான தொத்து வியாதியால் பாதிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கில் இறந்து சேதமடைந்துள்ளது. இன்னும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்காததால் அப் பகுதியில் பதட்ட நிலை நிலவுவது குறித்து''

இது குறித்த நிலைமையை விளக்க நான் இப்பொழுது முற்படுகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமாறி நோய் (''கானை'' என்றும், ''வாய்நோய், கால் நோய்'' என்றும் ஆங்கிலத்தில் ''Foot and Mou h disease'' என்றும் அழைக்கப்படும்), கடந்த இரண்டு மாதங்களாக பரவலாக இருந்து வருகின்றது.

இதுவரை சுமார் 159 மாடுகளுக்கு இந்நோய் தாக்கி அதில் 9 மாடுகள் இறந்ததாக அறிக்கை வந்துள்ளது.

கால்நடை வளர்ப்புத் துறையினர் தகுந்த தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். நோய் வந்த மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கோமாறி நோய் கால்நடைகளுக்கு எல்லாக் காலங்களிலும் தோன்றக்கூடியது. இந்த வியாதி வந்த நாட்டு மாடுகளுக்கு உயிர்ச் சேதம் அதிகமாக ஏற்படுவதில்லை. ஆனால், மேல் நாட்டு பசுக்களோ, கலப்பின மாடுகளோ தாக்கப்பட்டால், சில இறக்கக் கூடும். ஆகையால் கலப்பினப் பசுக்கள் வைத்திருக்கும் பண்ணையாளர்கள், அப்பசுக்களுக்குத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கலப்பின மாடுகளுக்கு தடுப்பு ஊசி ஒரு முறை போட்டுக் கொண்ட பின்னர் மூன்று மாதங்களுக்குள் ஒரு முறையும், அதன் பின்னர் ஆண்டுக்கு ஒரு முறையும் தடுப்பு ஊசி போட வேண்டும்.

வெக்கை நோய், தொண்டை அடைப்பான், சப்பை நோய் போன்ற தொற்று வியாதிகளுக்குத் தடுப்பு ஊசி இலவசமாகப் போடப்படுகிறது.

ஆனால் கோமாறி நோய் தடுப்பு மருந்து, தற்சமயம் உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள மத்திய அரசுக்கு உரிமையான கால் நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திலும் மற்றும் ஓர் தனியார் நிறுவனத்திலும் மட்டுமே இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.

ஒருமுறை உபயோகப்படுத்தும் மருந்தின் விலை ரூ. 8.00 ஆகும்.

தற்போது, பால் பண்ணையாளர்களுக்கு, கோமாறி நோய் தடுப்பு ஊசி மருந்தின் செலவின் பளுவைக் குறைப்பதற்காக மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து ஒரு திட்டத்தினைச் செயல்படுத்துகிறது. இத்திட்டம் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் உதகை பகுதிகளிலும் 7.20 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஊசி மருந்தின் விலையில் 50 சதவீதம் கால்நடைகளின் சொந்தக்காரரும் மற்ற 33-1/3 சதவீதத்தினை மத்திய அரசும், 16-2/3 சத வீதத்தினை மாநில அரசும் ஏற்கிறது. மேற்குறித்த திட்டத்தினை, மற்றப் பகுதிகளுக்குப் படிப்படியாகச் செயல்படுத்துவதற்கு, கால் நடை பராமரிப்புத்துறை இயக்குநர் ஆய்வு செய்து வருகிறார்.

இந்த கோமாறி நோய் தடுப்பு ஊசி மருந்து தமிழகத்திலேயே தயாரிப்பதற்கும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

தற்பொழுது தென்னாற்காடு மாவட்டத்தில் கால்நடை நோய் தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்காக ஒரு பிரத்தி யேகக் குழு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. துரை முத்துசாமி : இந்த மருந்துகள் இல்லாததால், வருவதில் காலதாமதம் ஏற்பட்டதால் இத்தனை ஆடுமாடுகள் இறந்திருக்கின்றன. இராணிப்பேட்டையில் நம்முடைய அரசாங் கத்தின் மூலமாகச் செய்யப்படுகிற மருந்து எதற்காகப் பயன் படுத்தப்படுகிறது ? மேலும் ஆடு மாடுகள் செத்து விவசாயிகள் ஆடு மாடுகளை இழந்திருக்கும் காரணத்தால் அவர்கள் மீண்டும் ஆடு மாடுகளை வாங்கக் கடனும், மானியமும் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அதுபற்றி அரசு ஆராய்ந்து பரிசீலித்து முடிவு எடுக்கும்.

திரு. துரை முத்துசாமி : இராணிப்பேட்டையிலே செய்யப் படுகிற மருந்து எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிவிப்பாரா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இராணிப்பேட்டையிலே செய்யப்படுகிற அந்த மருந்து தொண்டை அடைப்பான் நோய்க்கும், வெறி பிடித்த நாய் கடித்தால் அதைத் தடுக்கக் கூடிய அளவிற்கு ஒரு ஊசியே அந்த நாய்க்குப் போட்டால் வெறிபிடிக்காத அளவிற்குத் தடுப்பு ஊசிகள் தயாரிக்கப்படு கின்றன.

4. 1978-79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர் மானத்தை முன்மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ரூ. 65,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. ஒ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, 'மதுவிலக்கு அமலில்' நடைபெறும் ஊழல்பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 65, 75,000இல் ரூ. 100 குறைக்கவேண்டும்'
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியாத நிலையைப்பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 65,75,000இல் ரூ. 100 குறைக்கவேண்டும்'
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.